# வடக்கு-தெற்கு வழிச்சாலையுடன் மேலும் சீரான, கூடுதலாய் இணைக்கப்பட்ட பயணங்கள்

பயணிக்கும் இடத்துக்கு இன்னும் துரிதமான, இன்னும் பசுமையான பாதையில் செல்லும் ஓர் எதிர்காலத்தை, நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களும் மகிழ்வதற்கு அதிகமான வாழச்சிறந்த இடங்கள் உள்ள ஓர் எதிர்காலத்தைக் கற்பனை செய்துபாருங்கள். சிங்கப்பூரின் ஆக நீளமான போக்குவரத்து முதன்மை வழிச்சாலையான வடக்கு-தெற்கு வழிச்சாலை (NSC), வடக்கு வட்டாரத்துக்கும் நகரத்துக்கும் இடையே மக்கள் பயணிக்கும் விதத்தை மாற்றும்.

பேருந்துகளுக்கான தனித் தடங்கள், மிதிவண்டி ஓட்ட நீள்பாதைகள், நடைபாதைகள் ஆகிய பல்வேறு பயணமுறைகளை 21.5 கிமீ நீளமுள்ள வடக்கு-தெற்கு வழிச்சாலை ஒருங்கிணைக்கும். இந்த அம்சங்களினால், வாகன ஓட்டிகள், பேருந்துப்பயணிகள் பலருக்கும் வடக்கு-தெற்கு வழிச்சாலையில் மேலும் சீரான பயணம் கிடைக்கும். கூடுதலாய் இணைக்கப்பட்ட கட்டமைப்பால் நடைபயணிகளும் மிதிவண்டி ஓட்டிகளும் பயன்பெறுவர். இது, பல தலைமுறைகள் பயன்பெற்று மகிழக்கூடிய, இன்னும் சுத்தமான, பசுமையான நிலப் போக்குவரத்தை உருவாக்கும் நமது இலக்கின் அருகே நம்மை இட்டுச் செல்லும்.



எல்லோருக்கும் மேலும் சீரான, கூடுதலாய் இணைக்கப்பட்ட பயணங்களை அமைத்துத் தருவதில், வடக்கு தெற்கு வழிச்சாலை நம்மை ஒருபடி முன்னேற்றும்.



*ஓவியரின் கைவண்ணத்தில் வடக்கு-தெற்கு வழிச்சாலை.*

வடக்கு தெற்கு வழிச்சாலை குறித்த காணொளியைப் பார்க்க QR குறியீட்டை வருடவும்.

## 2020 அக்டோபர் 18-லிருந்து (ஞாயிறு)
# சாலை மாற்றம்

வடக்கு தெற்கு வழிச்சாலைச் சுரங்கங்கள் தாம்சன் சாலைக்கும் நியூட்டன், மோல்மின் சாலைகளுக்கும் இடையிலான சந்திப்புக்கு நேரடியாகக் கீழே இருப்பதால், கட்டுமானப் பணிகளுக்கு ஏதுவாக அச்சந்திப்பு மாற்றியமைக்கப்படும். 2020 அக்டோபர் 18-லிருந்து, தாம்சன் சாலை-நியூட்டன் சாலை-மோல்மின் சாலை பன்முனைச் சந்திப்பு, இரண்டு T-வடிவச் சந்திப்புகளாக மாற்றப்படும். நியூட்டன் சாலைக்கும் தாம்சன் சாலைக்கும் இடையே ஒரு சந்திப்பும் மோல்மின் சாலைக்கும் தாம்சன் சாலைக்கும் இடையே மற்றொன்றும் இருக்கும்.

போக்குவரத்து மாற்றங்களை வாகன ஓட்டிகளும் நடைபயணிகளும் கவனத்தில் கொள்ளவேண்டும். செல்லும் வாகனங்களையும் சாலைகளில் வைக்கப்படும் வழிகாட்டி அறிவிப்புகளையும் பின்பற்றி, வேண்டிய இடத்துக்குச் செல்ல வேண்டும்.

பாதிக்கப்பட்ட சாலைப்பகுதியில் பயணித்தால், போக்குவரத்து மாற்றங்களைக் கவனத்தில் கொள்ளுங்கள்.




| எங்கிருந்து | எவ்விடம் நோக்கி | கவனத்தில் கொள்ள வேண்டிய மாற்றங்கள் |
|---|---|---|
| மோல்மின் சாலை | நியூட்டன் சாலை | தாம்சன் சாலைக்குள் திரும்பும்போது, வலதில் திரும்பும் தடங்களின் இடதுதடத்தில் செல்லவும். பின்னர் நியூட்டன் சாலையை நோக்கிச் செல்லும் இடதுதிரும்பும் நுழைவுச்சாலையை எடுக்கவும். |
| | தாம்சன் சாலை (தீவு விரைவுச் சாலையை நோக்கி) | இடதுதடத்தில் இருந்தபடியே தாம்சன் சாலைக்குள் திரும்பி, நேராக செல்லவும். |
| | தாம்சன் சாலை (நகரத்தை நோக்கி) | மாற்றமில்லை. தாம்சன் சாலைக்கு, எப்போதும்போல் இடதுதிரும்பும் நுழைவுச்சாலையில் செல்லலாம். |
| தாம்சன் சாலை (நகரத்திலிருந்து) | தாம்சன் சாலை (தீவு விரைவுச் சாலையை நோக்கி) | நேராக தீவுவிரைவுச் சாலையை நோக்கிப் போவதற்கு, இடதுதடங்களிலேயே செல்லவும். |
| | நியூட்டன் சாலை | நியூட்டன் சாலையை நோக்கிச் செல்லும் இடதுதிரும்பும் நுழைவுச் சாலையில் செல்லவும். |
| | மோல்மின் சாலை | மாற்றமில்லை. மோல்மின் சாலைக்கு, எப்போதும்போல வலதுதிரும்பும் சாலைத்தடங்களிலேயே செல்லலாம். |
| நியூட்டன் சாலை | தாம்சன் சாலை (நகரத்தை நோக்கி) | இடதுதடத்தில் இருந்தபடியே தாம்சன் சாலைக்குள் திரும்பி, நேராக செல்லவும். |
| | மோல்மின் சாலை | தாம்சன் சாலைக்குள் திரும்பும்போது, வலதில் திரும்பும் சாலைத்தடங்களின் இடதுபக்கத்திலேயே செல்லவும். பிறகு மோல்மின் சாலையை நோக்கிச் செல்லும் இடதுதிரும்பும் நுழைவுச்சாலையை எடுக்கவும். |
| | தாம்சன் சாலை (தீவு விரைவுச் சாலையை நோக்கி) | மாற்றமில்லை. தாம்சன் சாலைக்கு, எப்போதும்போல் இடதுதிரும்பும் நுழைவுச்சாலையில் செல்லலாம். |
| தாம்சன் சாலை (தீவு விரைவுச் சாலையிலிருந்து) | தாம்சன் சாலை (நகரத்தை நோக்கி) | நேராக நகரத்தை நோக்கிப் போவதற்கு, சாலையின் இடதுதடங்களிலேயே செல்லவும். |
| | மோல்மின் சாலை | மோல்மின் சாலைக்குச் செல்ல, இடதுதிரும்பும் நுழைவுச்சாலையில் செல்லவும். |
| | நியூட்டன் சாலை | மாற்றமில்லை. நியூட்டன் சாலைக்குச் செல்ல, எப்போதும்போல் வலதுதிரும்பும் சாலைத்தடங்களில் செல்லலாம். |

மறவாமல் நீங்கள் செல்லும் பாதையைத் திட்டமிடுங்கள். போக்குவரத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த காணொளியைப் பார்க்க, QR குறியீட்டை வருடவும்.

www.lta.gov.sg
WeKeepYourWorldMoving
LTATrafficNews
LTASingapore
LTAsg

Land Transport Authority
We Keep Your World Moving